நான் ஒரு சராசரிக் குழந்தை

1. வம்பு தும்பு இல்லை - என்னால்
தொல்லையும் இல்லை.

பள்ளிக்கு தினம் செல்வேன் – வகுப்பில்
சொன்ன வண்ணம் செய்வேன்.

வாதம் ஏதும் செய்யேன், பிடிவாதம் கொஞ்சம் செய்வேன்.

சோம்பல் கொஞ்சம் உண்டு – சுணங்குவேன்
சராசரி மதிப்பெண் கண்டு.

2. ஆசிரியர் பார்வையில் நான் ”சுமார் ரகம்” தான் -
அம்மாஅப்பா பார்வையிலும் நான் அதேதான்.

எல்லோருக்கும் அது தெரியும் – எனக்கும் கூட!

அதுதானே என் கவலை - யாருக்கும்
புரியவில்லை என் மனநிலை!

3. விஞ்ஞானியாகி சாதிப்பேன் நான்,
ராக்கெட் ஏறி விண்ணில் பயணிப்பேன் நான்.

பெரிய பெரிய புத்தகங்கள் வாசிப்பேன் நான்,
மேடையேறி விவாதங்கள் பல புரிவேன் நான்.

கண்கவரும் கடைகள் பல திறந்திடுவேன் நான்,
காற்றினிலே நாடு பல பறந்திடுவேன் நான்.

வீதியிலே வாழ்வோர்க்கு அடைக்கலமும் நான்,
விண்ணை முட்டும் வீடு ஒன்று கட்டிடுவேன் நான்.

4. எல்லாரும் சொன்னார்கள் சராசரி என்று- என் மனமும்
நம்பிற்று அதுவே உண்மை என்று.

உள்ளுக்குள் தீயில்லை சுடரும் இல்லை- ஏனென்றால்
சராசரிக்கு உள்ளே உந்துதல் இல்லை.

யாருக்கும் என்னிடம் எதிர்பார்ப்பும் இல்லை-
எனக்கே நான் என்னவென்று புரியவுமில்லை.

5. வகுப்பினிலே மிக அதிகம் சராசரிதான் -

உலகிலேயும் மிக அதிகம் சராசரிதான்.

என்கனவு நினைவாகும் நாளும், ஒன்று உண்டா?
இருக்குமிடம் தெரியாமல் இருப்பது நன்றா?

அம்மா அப்பா ஆசிரியர்கள் சொல்வது பொய்யா?
சராசரி எனும் நினைப்பு தவறோ ஐயா?

My first so called poem in Tamil inspired written in 2018, rather saddened by "The Average Child" by Mike Buscemi.